காஞ்சி

ஞாயிறு மலர்

விலை 20 காசு

4 — 3.

13-8-67

மலர்க் கண்கள்!

[சீயேயெம்]

பால் நிலவு, வெள்ளிக் கிரணங்களைப் பூமித் தாயின் பட்டு மேனியில் வாரி இறைத்துக்கொண்டிருந்தது.

மெல்லிய பூங்காற்று வீசி, ஒருவித இன்பக் கிளுகிளுப்பை ஊட்டிக் கொண்டிருந்தது.

காற்றோடு கலந்துவந்த ஒருவித இனம் புரிந்து கொள்ளப்பட முடியாத நறுமணத்தால் அவன் கிறங்கிக் கொண்டிருந்தான்.

பஞ்சணையில் அவன் படுத்திருந்தான்! இந்தக் காலத்து குஷன் மெத்தை அல்ல; மலர் மஞ்சம்கூட அல்ல; இலவம் பஞ்சு, தன் மென்மை எம்மட்டு என்று எடுத்துக் காட்டும் அளவுக்கு அறைகூவல் விடுப்பதாய் அமைக்கப்பட்டிருந்த பஞ்சணை அது,

அதிலேதான் அவன் படுத்துக் கிடந்தான்! ஆமாம் படுத்துதான் கிடந்தான்! நள்ளிரவுக்கு மேலாயிற்று. கோட்டான்கள் கூவத் தொடங்கிவிட்டன, ஆந்தைகள் அலறல் ஆலாபனையையும் ஆரம்பித்து விட்டன!

அப்போதும் அவன் படுத்துக் கொண்டேதான் இருந்தான். கண்கள் தூக்க மயக்கத்தில் தடுமாறின; என்றாலும் விழிகள் மூட மறுத்து அவனைக் கொடுமைப் படுத்தத் தொடங்கிவிட்டன!

எப்படியாவது உறங்கவேண்டும் என்றுதான் முயன்றான்! முடிகிறதா? உறக்கம் என்ன கூப்பிட்டவுடன் ஓடிவந்துவிடக் கூடியதா? அல்லது ஓடிவந்து அணைத்து ஆழ்த்திக் கொள்ளும் வயதா?

கட்டான காளைப் பருவம், அவனுக்குச் சொந்தமானது. அனைத்துலக இன்பங்கள் அனைத்தையும் அவன் ஒருவனுக்கே ஒதுக்கிவைத்துவிட வேண்டும் என்ற பேராசைப் பிடியிலே மூழ்கிக் கிடக்கின்ற இளைஞன் அவன்!

இவ்வளவுக்கும் மேலாக, அவன் அவனுடைய அவளது' தளிர் மேனியைத் தீண்டித் தீண்டி வாழ்வை, வையத்தை அனைத்தையுமே எத்தனை முறை மறந்திருக்கிறான்!

தன்னை மறந்திருக்கச் செய்தகன்ற அந்தத் தளிர்மேனியாளின் நினைவிலே ஊசலாடிக் கொண்டல்லவா இப்போதிருக்கிறான்! அந்தத் தகிப்பில்லல்லவா படுக்கையிலே கிடக்கிறான்!

படுக்கையில்தானென்ன! வாளா படுத்திருக்க முடிகிறதா? புரள்கிறான்! அப்படியும் இப்படியுமாகப் புரள்கிறான்! எழுந்துஉட்காருகிறான். செ! ஒருவித அலட்சியம் கலந்த ஏக்கம்! மீண்டும் படுக்கிறான்!

தூக்கம் வரவில்லை. தவியாய்த் தவிக்கிறான். மீண்டும் எழுந்து அங்கு மிங்கும் உலவுகிறான். அவன் நினைவு தடுமாறுகிறது. அந்த இடத்தில் 'அவளோடு' எத்தனை முறை ஓடிப் பிடித்து விளையாடி இருக்கிறான்! ஏக்கம் பற்றிக் கொள்கிறது—வந்து படுக்கிறான்!

அப்போதைய அவனது உடல் வெம்மையை குளிர் காற்றால் சமநிலைப்படுத்த முடியவில்லை, ஆத்திரம் பற்றிக் கொள்கிறது. என்ன பயன்! தூங்குவதற்கு முடியவில்லையே!

'அன்பே! அழகே! இன்பமே! எழிலே! இன்னுயிரே! கண்மணியே!' என்றெல்லாம் அழைத்து அணைத்துக் கனிஇதழைக் காயப்படுத்திய காட்சிகள் அவன் முன் நிழலாடத் தொடங்கி விடுகின்றன! பாவம் அவன்!!

'அத்தான்! அத்தான்!' என்று சொல்லக் கூறி, சொல்லுக்குச் சொல் முத்தமிட்டு சுகம் பெற்ற காட்சிகள் அவனை அலைக்கழிக்கின்றன!

இனிமேல் அவனால் தூங்க முடியுமா? காதல் ஏக்கம் இப்போது அவனைக் காந்தச் செய்துவிட்டதே!

வெள்ளி முளைத்து விட்டது! வேதனை மட்டும் தீரவில்லை. தூக்கம்? அது மட்டும் அவளின்றி எங்கிருந்து வரப்போகிறது! மறுபடியும் மறுபடியும் புரள்கிறான்!! புரண்டு கொண்டே இருக்கும்போது கிழக்கும் வெளுத்து விடுகிறது!

ஆனால் அவன்? அவன் உடல்? பழுக்கக் காய்ச்சிய இரும்பினும் பல படி சூடு' பெற்று அல்லவா அவனைத் தீய்க்கிறது!

எழுகிறான்! இனி தாள முடியாது! அவளைச் சென்று காணவேண்டும்! முடியுமா? முடியாதே! அது ஆடி மாதமல்லவா! அப்படிச் சொல்லித் தானே அவளை அவனிடமிருந்து பறித்தோடி விட்டனர் அவளது பெற்றோர்!

வெம்மை குறையவில்லை. நடக்கிறான்! நடை தொய்கிறது! துவள்கிறது! தள்ளாடியபடியேநடக்கிறான்! எப்படியோ நடந்து சென்று அந்த தாமரைக் குளத்தில் விழுகிறான்!!

———

அவ்வளவுதான்! பூத்திருந்த மலர்கள் கூம்பத் தொடங்கி வி கின்றன! குளத்தில் மூழ்கி எழுகிறான். கண்களின் கரிப்பு—மெல்லிய பார்வைக்குத் திரையி கிறது.

தாமரை மலர்களின் கூம்பிய தோற்றம் அவனது சிந்தனையில் தடையேற்படுத்துகிறது. எண்ணங்களில் விரிசல்!

அருகே அங்கிங்குமாக குவளை மலர்கள்! நீல மலர்கள்! இவையெல்லாம்கூட எண்ணத்தை நெகிழச் செய்கின்றன.

உடல் வெப்பம் தாளாமல்தான் அந்த கருக்கலில் நீரில் குதித்தான். ஆனால் அந்த மலர்கள் கூம்புவானேன்? கூம்பிவிட்டதுஉண்மை தானே!

சிந்தனை தடுமாறியது அவனுக்கு. கண்களை அகலவிரித்து அங்குமிங்கும் பார்த்தான்!

குவளை மலர்களும் நீல மலர்களும் அவனைப் பார்த்துச் சிரித்தன! ஆமாம், அவை தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக எண்ணிக்கொண்டான்; வெட்கம் கலந்த வேதனை அவனைக் கப்பிக்கொண்டது.

மலர்களின்மீது இப்போது அவனுக்கு ஆத்திரம்! ஆத்திரப்பட்டு? அவன் கோபம் கண்டு, அடங்கி ஒடுங்கி வி வனவோஅவை? அவையென்ன, அவனது அதட்டல் கேட்டவுடனேயே அடங்கி ஒடுங்கிப்போகும் 'அவளோ'?

அவன் இப்படியும் நினைத்தான்!

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ. 10   ஆறுமாதம் ரூ. 5

மலர் 4   3 8 67   இதழ் 3

விசித்திரம் கலந்த வேதனை?

இந்தக் கிழமை தொடக்கத்தில் டெல்லி—மாநிலங்கள் அவையில் விசித்திரம் கலந்த வேதனையான நிகழ்ச்சியொன்று நடைபெற்று, அவையையே திக்குமுக்காடச் செய்துள்ள செய்தி வெளியாகி இருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றிய மத்திய அரசின் அக்கறையும் சிந்தனையும் எந்த அளவுக்கு விரிவடைந்திருக்கிறது என்பதற்கான நகைச்சுவை மிக்க ஒரு எடுத்துக்காட்டு அது.

> "மூன்று குழந்தைகள், அல்லது அதற்கும் அதிகமான குழந்தைகள் உள்ள மத்திய அரசாங்கப் பெண் ஊழியர்களுக்கு 1968 ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து பிள்ளைப் பேறுகால விடுமுறை கொடுக்கப்பட மாட்டாது."

என்ற ஒரு சுற்றறிக்கையை மத்திய அரசின் தொழில் துறையல்லாத பிரிவு பெண் ஊழியர்களுக்கு 1967 - ஜூன் திங்கள் 30-ம் நாள் அனுப்பி இருக்கிறதாம்!

மத்திய அரசின் நிதி அமைச்சகம் இதனை அனுப்பி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

தன் பெண் ஊழியர்களுக்கு, அரசு இப்படியொரு சுற்றறிக்கையை அனுப்பி இருப்பதன் முக்கியக் காரணம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அவர்கள் கைக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துவதேயாகும்.

அரசு பெண் ஊழியர்களுக்கு பேறு கால விடுமுறையை இனி அளிக்க முடியாது என்று மறுத்து விடுவதன் மூலம் இந்திய நாட்டு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்ற முடிவுக்கு வந்து, அறிக்கைத் தயாரித்து அனுப்பிவைத்தவர்களது மூளை'யைப் பரிதாபத்தோடு பரிசீலிக்கத்தான் வேண்டும்!

இந்த அறிக்கையை வேறுவிதமாகப் பொருள் கொள்ள வேண்டுமானால், விடுதியை மறுப்பதன் மூலம் பிறப்புக்கள் அந்தந்தப் பணி மனையிலேயே நிகழவேண்டும் என்று அரசு விரும்புகிறது—என்று கூறிவிட முடியுமில்லையா? நகைப்புக்குரிய எவ்வளவு பெரிய விஷயம் இது!

மாநிலங்கள் அவையில் இந்த அறிக்கை பற்றி வினா வெழுப்பப்பட்டு, அதற்கு விடையாக சுகாதார துணை அமைச்சர் பி எஸ். மூர்த்தி 'குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய நடவடிக்கை' என்று சொல்லி இருக்கிறார்;

இதனைத் தொடர்ந்து உறுப்பினர்களிடையே மாறுபட்டக் கருத்துக்கள் பிறந்து, அவையை சலசலப்புக்கு ஆளாக்கிவிட்டிருக்கிறது,

பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சிக் காரியதரிசிகளில் ஒருவரான திரு. சந்திரசேகர், இந்த அறிக்கையின் நோக்கம் பற்றி அர்த்தமற்றது; மூடத்தனமானது என்ற வார்த்தைகளால் விளக்கி இருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து இன்னும் சுவையான வாக்கு வாதம் நடைபெற்றிருப்பதாகச் செய்தி இதழ் நமக்கு அறிவிக்கிறது.

> 'பெண் ஊழியர் ஏற்கெனவே கர்ப்பமாக இருக்கிறார்; அவருக்கு விடுமுறை மறுக்கப்பட்டால் குழந்தை பிறக்காமல் நின்றுவிடுமா?"

என்றும்,

> "கர்ப்பிணிகள் அலுவலகத்திலேயே பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டுமென அரசு விரும்புகிறதா?"

என்றும் பலவிதமாக விமர்சனங்கள் செய்யப்பெற்றுள்ளன.

எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் வன்மையாகக் கண்டித்து அறிக்கையினைத் திரும்பப் பெற வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்கள்

மொத்தத்தில், மத்திய அரசு குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்த தீவிரமாகிவிட்டது—என்பது புலனாகிறது.

பெருகிவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை யாரும் குறைகூற முடியாது. கூடாது ஆனால் மேற்கொள்ளப்படும் முறைகள் பற்றி கருத்தறிவிக்கவும் பிரச்னையாக்கவும் அறிவாளர்கள் அனைவர்க்கும் உரிமையுண்டு.

கடந்த கிழமை வெளியான ஒரு செய்தியிலிருந்து, அறுவைச்சிகிச்சை மூலம் கருத்தடை செய்து கொண்ட 300க்கும் மேற்பட்ட பெண்கள் 'குழந்தைப்பேறு' அடைந்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

இது உண்மையாக இருக்க முடியுமென்றால், இதிலே சமூகச் சிக்கல் பல எழ இடம் உண்டு என்பதை மறுக்க முடியாது.

கருத்தடைத் திட்டத்திற்கு சிறந்த வேறு மற்று முறைகளை ஆராய்வதனைவிட்டுவிட்டு, பேறுகால ஓய்வு விடுதியைத் 'தரமுடியாது' என்று கூற முன் வருவதனை எதற்கு ஒப்பிடுவது என்றே விளங்கவில்லை. உறுப்பினர்கள் பயன்படுத்தி இருக்கிற அருவெறுக்கத்தக்க சொற்களை நாம் பயன்படுத்த விரும்பவில்லை. இப்பிரச்னை சீப்பினை ஒளியவைப்பதன்மூலம் திருமணத்தைத் தடைப்படுத்திவிட முடியும் என்ற பழங்கால பழமொழி போல்தான் இருக்கிறது.

மத்திய அரசு இதனைத் திரும்பப் பெற்று—புத்தி சாலித்தனமான வழிவகைகளை ஆராய்வதொன்றுதான் சிறந்த முறையாக இருக்குமென வலியுறுத்துகிறோம்.

❀

முகப்பில் :- செங்கை மாவட்ட தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்.

திரு. செ. கோ. விசுவநாதன்—செங்கற்பட்டு

திரு. கே. எம். இராசகோபால்—உத்திரமேரூர்

திரு. கொளத்தூர் கோதண்டம்—மதுராந்தகம்

சேலம் இரும்பு--ஒரு பழங்கதை?

—[டாக்டர் எஸ். சரவணன், எம். எஸ்ஸி, பிஎச். டி.]—

****

தொழில் வளத்திற்கு அடிப்படை கனிவளம். தொழில் வளமே பொருளாதார செல்வத்தின் தலைவாயில். இது ஏற்படுத்தும் சிறு வாயில்களே சமூகக் கலாச்சார பெருவாழ்வு.

கனிப் பொருளிலிருந்து இரும்பு பிறக்கவும், இரும்புஎஃகாக வளர்ந்து இயந்திரங்களாக உருமாறவும் நிலக்கரி தேவை. இரும்பும் நிலக்கரியும் இணைந்து நிற்கும் இடத்தில் பொன்னும் மணியும் பணிந்து நிற்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக; இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளின் தொழிற் புரட்சி சரித்திர ஏடுகளில் அறைகூவலிடுகிறது.

கனிப்பொருள் வளங்களைப் பெற்றிருந்த நாடுகள், அவற்றின் அருமையை அறிய முடியாத மக்களைப் பெற்றிருந்த காரணத்தால், மலிவான விலைக்கு மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியான மூலப் பொருள்கள் உருமாறி மிக அதிகமான விலையைச் சுமந்து திரும்பி வந்தன. மூலப் பொருள்களைக் கொடுத்ததுடனல்லாமல் அவற்றிலிருந்து உற்பத்தியான பொருள்களுக்குச் சந்தையாகவும் பல நாடுகள் இருந்தன.

ஒரு சில காலத்திற்கு முன்பு. இந்தியா ஒரு கனிவளமற்ற நாடாகவே கருதப்பட்டது, அதிலும் தென்னிந்தியாவில் கனிச் செல்வங்களே இல்லையென்றும், குறிப்பாகத் தமிழ்நாடு இத்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது என்றும் கருதப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் கனிப் பொருள்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள் அனைத்தும் வடஇந்தியாவில் வெற்றி தேடித் தந்தன. புவியியல் நிபுணர்கள் அப்பகுதிகளில் மேலும் ஆர்வத்துடன் செயல்படத் தொடங்கினர். கனிவளங்கள் கண்டுபிடிப்பதைத் தொடர்ந்து பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் எஃகு ஆலைகளும், இரயில் என்ஜின் தயாரிக்கும் சித்தரஞ்சன் தொழிற்கூடமும் ஆரம்பிக்கப்பட்டன.

தென்னிந்தியாவிலும் மைசூர் மாநிலத்தில் இரும்பு, மாங்கனீசு, செம்பு, குரோமியம் ஆகிய கனிப் பொருள்களும். கேரள மாநிலத்தில் 'ரேடியோ உணர்வு' மோனசைட், இல்மனைட் ஆகிய கனிப்பொருள்களும், ஆந்திர மாநிலத்தில் அபரகமும் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றைச் சார்ந்த தொழில்களும் தோற்றுவிக்கப்பட்டு இயங்கிவந்தன. தமிழ் நாட்டை இயற்கை அன்னை வஞ்சித்துவிட்டாள் என்ற பெருங்குறை இருந்துவந்தது.

கடும் உழைப்பைக் காணிக்கையாக்கக் காத்திருக்கும் மக்களும். தொழில் நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்றிருக்கும் நாடுகளுக்குச் சென்று அவற்றில் பயிற்சி பெற்றுத் திரும்பி வந்து அதை நாட்டுக்குப் பயன்படுத்தத் துடிக்கும் இளைஞர்களும் ஏராளமாக இருக்கின்றனர். இவர்கள் மலைகளை 'மெரினு சாலை'யாக நினைத்து காடுகளை நகரங்களாகக் கருதி, வேளைக்கு உண்பதை நெடு நாட்களாக மறந்து, முடிவை அறியாத பயணத்தை மேற்கொண்டு, கடலலைகளில் புது உலகைக் கண்ட வண்ணம் சென்ற கொலம்பஸ் போன்று. மலைப்பாறைகளில் மறைந்து கிடந்த புதையலைத் தேடித் திரிந்தனர், அவர்கள் ஏறிய மலைகளைப் போன்ற உயர்ந்த, பரந்த குறிக்கோளை நாடி, கால்களின் சக்திக்கு அப்பாற்பட்ட தூரத்தைக் கடக்க நடந்தனர். இலட்சியப் பயணம் சில வெற்றிகளைத் தேடித் தந்தது. அவற்றுள் ஒன்று, 'சேலத்துக் கஞ்சமலை சிறந்த இரும்புக் கனிவளம் படைத்தது' என்ற கண்டுபிடிப்பாகும், இச்செய்தி நாட்டின் செவிகளிலே தேனாகப் பாய்ந்தது. காண்போரின் நினைவை நிறுத்தக் கூடிய அளவுக்குப் பெரிய இரும்பு வட்டங்கள் மலைத் தொடர்களினூடே ஓடுகின்றன. இவை மாபெரும் இரும்புத் தூண்களாக மலைத் தொடர்களினுள் புதைந்து கிடக்கின்றன. கனிப் பொருளிலிருந்து இரும்பைத் தனித் தெடுப்பதற்குப் பெருமளவு நிலக்கரி தேவை என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர். வடநாட்டிலிருந்து நிலக்கரி சேலத்துக்குக் கொண்டு வரப்பட்டு இரும்பைப் பிரித்தெடுப்பது பேரிழப்பைக் கொடுக்கும் என்பதும் தெரிய வந்தது.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நெய்வேலி என்ற கிராமத்தில் மிராசுதார் ஜம்புலிங்க முதலியார் தம்முடைய விளைநிலத்தின் பாசன வசதிக்காகப் பூமியைத் தோண்டியபோது இயற்கைநீர் ஊற்றுடன் கலந்து கருப்பு நிறத்தில் சிறு சிறு துணுக்குகள் வந்து வீழ்ந்ததைச் சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தார். அதிகாரிகள் அவைகளை இரசாயன சோதனைக்கு அனுப்பியதில் நிலக்கரியின் முற்றுத நிலையிலிருக்கும் லிக்னைட்தான் அந்தக் கருப்புத்தூள் எனத் தெரிந்தது. மிகப் பெரிய அளவில் இக் கனிப் பொருள்கள் இருப்பதைப் புவியியல் நிபுணர்கள் ஆராய்ந்தறிந்தனர். பழுப்பு நிலக்கரியின் முக்கியத்துவம் இரும்புக் கனிகள் நிறைந்த சேலத்திற்கு அருகில் அது கிடைப்பதில் தான் அடங்கியுள்ளது.

தமிழ் நாட்டின்மீது இயற்கை அன்னை அன்புள்ளவளாகவே இருக்கின்றாள்; அவள் கொடுத்த காமதேனு நெய்வேலி நிலக்கரி. அவளருளிய கற்பகத்தரு "சேலத்து இரும்பு" பெருங்கொடை வள்ளல்களைத் தமிழ் நாட்டிற்கு வழங்கிய இயற்கை அன்னையே இன்று வள்ளலாக மாறிப் பொருத்தமானகொடை வழங்கியிருக்கிறாள். "வெண்ணிலவும் வானும்போல, வீரனும் கூர் வாளும்போல" என்று இனி இலக்கிய உருவக வரிசையில் 'சேலத்து இரும்பும், நெய்வேலி நிலக்கரியும் போல" என்ற பிணைப்புத் தொடரும் இடம்பெறும்.

இரும்புக் கனிப்பொருள்கள் மண்டிக் கிடக்கும் கஞ்சமலை ஒரு தெய்வீக மலை. இம்மலையைப்பற்றி நாட்டு மக்களில் பலபேர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். உள்ளூர் மக்கள் அனைவரும் கஞ்சமலையைப்பற்றித் தெரிந்திருந்தாலும் இம்மலையை அவர்கள் "சித்தர்மலை" என்றும், "சித்தர் கோயில் மலை" என்றுந்தான் அழைக்கின்றனர். இங்கு எல்லா வலிமையும் பொருந்திய சித்

(13-ம் பக்கம் பார்க்க)

அரசியல் வறுமை பார்வையை மறைக்கிறது

ஆளவும் வாய்ப்பில்லை; ஆள்வதைப் பார்க்கவும் மனம் இல்லை

த. நா. கா. தீர்மானம்; பொறாமை, பொல்லாங்கு உணர்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டு

மிக அக்கறையுடனும் பதட்டத்துடனும் கீழே குனிந்து பாதையைப் பார்த்தபடி ஒருவன் அங்குமிங்குமாகப் போய்வந்துகொண்டிருந்தான்.

அவன்மீது பரிதாபப்பட்ட மற்றொருவன் "நீண்ட நேரமாக இப்படி எதனையப்பா தேடுகிறாய்?" என்று கேட்டான்.

"எனது வண்டியையும் மாட்டையும் காணோம் அது இங்கே எங்காவது கிடைக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் முன்னிலும் சற்று அதிகமாகக் கவிழ்ந்து கீழே பார்த்தபடி,

ஐந்தேமாத ஆட்சிக் காலத்தில் கழக நிர்வாகத்தில் தமிழ்நாட்டில் சட்டம் அமைதி சீர்குலைந்துவிட்டதாக தமிழ்நாடு காங்கிரஸ் போட்டிருக்கும் தீர்மானத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகள்:

1. 'தேசபக்தர்' டி.ஜி. கிருஷ்ணமூர்த்தி தாக்கப்பட்டதனையொட்டி தாக்கியவர்கள்மீது நடவடிக்கை எடுக்காதது,
2. சட்டமன்ற உறுப்பினர் ஜெயராஜ் தாக்கப்பட்டிருப்பது.
3. காங்கிரஸ்காரர்கள்மீது பொய்க்கேசுகள்போடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.
4. அரசியல் காரணத்துக்காக காங்கிரஸ்காரர்கள்மீது தாக்குதல்களும் வன்முறைகளும் வளர்ந்து வருகின்றன.

சட்டமும் அமைதியும் குலையத்தக்க அளவுக்கும் எட்டுப்பத்தித் தலைப்புகளையும் மீறக்கூடிய அளவுக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த காரணங்கள் இவைதான்.

இருபதாண்டுகளாக இந்தியா முழுமையும் ஆண்ட அனைத்திந்திய அமைப்பு எதிர்க்கட்சியாக மாறியதும் கண்டுபிடித்திருக்கிற குற்றங்குறைகள்—

தேசபக்தர் டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி தாக்கப்பட்டது குறித்தும்—

காங்கிரஸ்காரர்கள்மீது பொய்க் கேசுகள் போடப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது என்ற ஹேஷ்யமும்தான் என்று படிக்க நேரும்போது பரிதாபம் மேலிடுகிறது.

மாலைநேர மேடைகளில் பதிவாகாது என்ற தைரியத்தில் பேசும் அரைகுறை அவதூறுகளைத் தமிழ்நாடு காங்கிரஸ் அதிகார பூர்வமான தீர்மானமாகவும் போட முயன்றிருப்பது அவர்களது பழம் பெருமைக்குச் சரியானதாக இல்லை.

எஸ். ஆர்.

சீனக்காரன் இருமுறை தாக்கிய போது,

பாகிஸ்தானுடன் ஒருமுறை போரிட்டபோது

நாடு பூராவுமே கலகம் கலவரம் என்ற காரணம்காட்டி நந்தா பதவி விலகியபோது,

இங்கேஉள்ள காங்கிரஸ்காரர்கள் இவ்வளவு பதட்டப்பட்டிருப்பார்களா என்றால் இல்லை.

ஜெயராஜும் தேசபக்தரும் தாக்கப்பட்டிருப்பது தமிழகத்தில் சட்டமும் அமைதியும் குலைந்துவிட்டதைக் காட்டுகிறதாம்; அதனால் அனைவரது உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லையாம்.

"தேசபக்தர்" டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி மட்டுமல்ல,

"சாதாரணம்" துணை மேயர் அதைவிடச் சாதாரணம் தமிழக அமைச்சர் ஒருவர் அதேபோல் பொதுமக்களில் பலர் சென்னைத் தீவிபத்துகளின்போது தடுத்து நிறுத்தப்பட்டு சோதனைகளுக்குள்ளாகியிருக்கின்றனர்.

தொடர்ந்து விடுகள் பறிபோகிறதே என்ற பதைப்பு—இது யார் வைத்த கொள்ளியாக இருக்கும் என்ற வேகம் அலைக்கழிக்கப்பட்ட நிலை — ஆத்திரமடைந்த போக்கு இந்த அடிப்படைகளில் குற்றவாளி கண்டுபிடிக்கப்படவேண்டும் என்ற குடிசை மக்களின் தனிப்பட்ட ஆர்வமான முயற்சி வழியில் செல்பவர்களுக்கு ஓரளவுக்கு இடையூறு இருந்திருக்கலாம்.

வழியில் போனவர் வந்தவர்கள் அரசியல் அடையாளம் கண்டு நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவில்லை என்பதற்குத் துணைமேயரும்அமைச்சரும் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதே அந்த சான்றுகள்.

ஆத்திரமடைந்த மக்களிடையே தனது அரசியல் நிலையை ஸ்தாபிக்க முயன்றது தேசபக்தரின் தவறு என்ற ஒரு கருத்தும் அப்போது எழுந்தது குறிப்பிடத்தக்கது.

சற்று முன்யோசனையுடன் அல்லது சிறிதளவு பொறுமையுடன் செயல்பட்டிருந்தால் கலவரம் நிகழவொட்டாமலேகூட தடுத்திருக்க முடியும் அவர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் நடந்த நிகழ்ச்சியைவைத்து தமிழகம் பூராவுமே சட்டமும் அமைதியும் இல்லை என்று கூறுகிறது காங்கிரசுக் கமிட்டியின் தீர்மானம்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர் ஜெயராஜ் தாக்குதலுக்குள்ளாகியிருப்பது ஒரு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டிருக்கிறது.

சம்பவம் குறித்து முதலமைச்சர் வருத்தம் தெரிவித்துத் தந்தி அனுப்பினார்.

பொதுப்பணி அமைச்சர் பொதுக் கூட்டமொன்றில் தாக்கியவர்களைக் கண்டித்துப் பேசினார்.

ஜெயராஜே மருத்துவ மனையில் கொடுத்த போலீசு வாக்குமூலத்தில் தாக்கியவர்களை யார் யார் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எந்தவித அரசியல் வண்ணமும் இல்லை.

ஆனால் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் தீர்மானம் மட்டும் அரசியல் காரணம் என்று கூறுகிறது.

இதனால் மாநிலம் பூராவும் அமைதியில்லை என்று குற்றம் சாட்டுகிறது.

அடுத்து ஒரு காரணமாகக் காட்டப்படுவது ஆங்காங்கே காங்கிரசுக்காரர்கள் தாக்கப்படுவதாக—அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு வருகிறது என்று தெரிய வருவதாக ஒரு ஹேஷ்யம், ஊர் பேர் இல்லை. நேரம் காலம் இல்லை, 'தெரிய வருகிறது' என்ற ஆதாரமில்லாத கற்பனைக்கு தமிழகக் காங்கிரசு அதிகாரபூர்வமான தீர்மானம் போட்டிருக்கிறது.

இப்படி ஒருசில வதந்திகளையும் தியாகிகள் பட்டம் பெறுவதற்காக நசுக்கப்பட்டு வருகிறோம் என்று மாலைநேர மேடைகளில் பேசி வருவதையும் இரண்டே இரண்டு அரசியல் கலக்காத வன்முறைச் சம்பவங்களையும் ஒன்று சேர்த்து தமிழகம் பூராவுமே சட்டம் அமைதி சீர்குலைந்துவிட்டதாகக் கூறுகிறது நிலைகுலைந்திருக்கும் காங்கிரசுக் கமிட்டி!

தனது பிள்ளை மந்தம் என்பதைக் கூற விரும்பாத தந்தையர் சிலர் 'இந்த காலத்துப் பிள்ளைகளே மோசம்; எல்லாம் சுத்த மண்டுகங்கள்' என்று கூறுவது உண்டு.

1967 வரையில் இருபது ஆண்டுகளாகத் தமிழகத்தில் துப்பாக்கி வெடிக்காமல் காங்கிரசு துரைத்தனம் நடத்தியது கிடையாது.

அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிடாமல் எதிர்க்கட்சிகளை உலவவிட்டது கிடையாது.

காங்கிரசு முத்திரையுடன் நீதிமன்றம்வரை சென்று நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் — கொலை பாதகங்கள் — வன்முறைச் சம்பவங்கள் ஏராளம்.

இந்தி எதிர்ப்புணர்ச்சியை அப்போது ஆட்சி நடத்தியவ கள் அடக்கிய விதம் உலகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் தெரிந்த கதை.

அரசியல் தலைவர்களை திடீரென சிறை பிடித்தது—தனிமையில் வாட்டியது—ஜனவரி 26 தூக்க நாளின் போது கழகத்தலைவர்களின் வீடுகள் தோறும் புகுந்து நடத்திய அட்டகாசங்கள் நாடே அறிந்ததுதான்.

நீல நிற போலீசு வான்களில் ஏறிச் சென்று காங்கிரசார் காட்டிக் கொடுக்க நடத்திய அபாண்டக் கைதுகள் கணக்கி லடங்காதவை.

அப்போதெல்லாம் சட்டமும் அமைதியும் ஒழுங்காக நடந்ததா? உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இருந்ததா?

எதிர்க் கட்சிகள் ஆட்சிக்கு வந்துள்ள மாநிலங்களிலேயே கூட அமைதியும் திறமையும் மிகுந்த நிர்வாகம் நடைபெற்று வருவது இன்று தமிழகத்தில்தான்.

அனுபவப்பட்டவர் எனப்பட்ட நம்பூதிரிபாட், அசகாயசூரர் என்று கருதப்பட்ட அஜாய்கோஷ் ஆகியோரின் நிர்வாகம்கூட பல கேள்விக் குறிகளைப் பெற்று வரும்போது—

முற்றிலும் புதிய கழக ஆட்சி அரசியல் அமைதியுடனும் நிர்வாகச் சிறப்புடனும் மக்கள் ஆதரவுடனும் நிதானமும் நேர்மையும் மிளிர ஆரம்ப நாட்களைக் கடந்து வருவது எதிர்க் கட்சியாகியிருப்பவர்களுக்குப் பொறுமை உணர்ச்சிகளைக் கொடுப்பதில் வியப்பதில்லை. அதன் பயனாக பொல்லாங்குபேசுவதிலும் ஆச்சரியமில்லை.

இன்று அவர்கள் பெற்றிருக்கும் அரசியல் வறுமையைத்தான் தமிழ் நாடு காங்கிரசின் அதிகாரபூர்வமான தீர்மானம் பறை சாற்றித் தெரிவிக்கிறது.

மக்கள் ஆள்வதற்குத்தான் வாய்ப்பு தரவில்லையே தவிர ஆள்வதைப் பார்க்கும் மனப் பக்குவத்தை எடுத்தெறிந்துவிட்டு எதிர்க் கட்சியாக இருங்கள் என்று காங்கிரசாரைப் பார்த்துக் கூறவில்லை.

பிரச்சனைகளுக்காகத்தேடி அலைவதன் பயன் இது. தலைவரே நேரம் சரியில்லைஎன்று இதுவரை மௌனம் காத்துவிட்டு வருகிற சுதந்திர நாளன்று அதனை கலைக்கப்போகிறார். அன்றையதினம் அவர் என்ன பேசப் போகிறார் என்பதைப் பார்த்துவிட்டுப் பின்னர் இந்தத் தீர்மானத்தைத் தமிழகக் காங்கிரஸ் போட்டிருக்கலாம்.

எடுத்துச் சொல்வதற்கு உண்மையான குற்றங் குறைகள் இல்லை என்றால் சிறிது காலம் அமைதியாக பார்வையாளராகவோ அல்லது மனம் இடம் தந்தால் ஆட்சிக்குப் பக்கபலமாகவோ பாடுபடலாம்.

அதைவிட்டு இதுபோன்ற தீர்மானங்களைப் போடுவதால் இந்தியாவின் பழைய பெரிய கட்சி என்ற பெருமையையும் காங்கிரசார் விரைவாக இழக்க நேரிடும்.

இந்தியாவுக்கே வழி காட்டும் கழக ஆட்சியையும் குறைசொல்லிவிட்டுத் தமிழகக் காங்கிரஸ்காரர்கள் எந்த வெளிநாட்டில் போய் வாழப் போகிறார்களோ தெரியவில்லை!

❋

எனையறியச் செய்!

— திருவாரூர் முத்துராமன் —

தென்றல் வசந்தம் திருநிலவு நீஎனக்கு
என்றான் இருந்தேன்! இறவாமல் பூச்சுமந்தேன்!
முன்றில் முழுநிலவு முன்திங்கள் முன்னிரவில்
அன்றில் பெடையாமென் ஆண்துணையைக் காட்டுதடீ!
வேல்விழியை வெய்தோளை வேண்டுமெனக் கேட்டதனை
கோலமயில் சாயலினைக் கோவையிதழ்த் தேனமுதை
ஞாலமதின் பெண்மையினை நான்வியந்தத் தெங்கிளநீர்
பால்முகத்தைப் பையப் பறித்ததனை நான்நினைந்து
தித்திக்கு தென்றவுடன் தின்றதனால் என்றான்!நான்
எத்திக்கு என்றேன்! இனம்புரியா இன்பபுரி
முத்தந்தா என்றான்! முறுவலித்தேன்! முல்லைப்பல்
பித்தந்தான் என்றானே! பின்என்றேன் தோள்சாய்ந்தான்!
தென்றல் வசந்தம் திருநிலவு நீஎனக்கு
என்றான் இருந்தேன் எழில்நிலவே! என்மேனி
குன்றும் குமையும்; அலர்பிறக்க விட்டயலூர்ச்
சென்றார்க் கெனையறியச் செய்!

“உங்கள் வோட்டு”

-[பண் நெடுமாறன்]-

‘பாண்டியன் தேநீர் விடுதியி’ னின்றும் வெளிவே வந்தான் நல்லமுத்து. நெடிய உருவமும், தலையிலணிந்த முண்டாசும் நீண்ட நாசிக்கும், கறுத்துத் தடித்த அந்த பெரிய உதடுகளுக்குமிடையே கம்பீரமுடன் நிற்கும் அந்த மீசையும் நல்லமுத்துவைச் சரியானஅடியாள் என்றே காட்டிவிடும். அவனுக்குத் தொழிலே அதுதான் என்ருலும் வியப்பே இல்லை. காட்டூரின் அந்தப் பகுதிக்கு நல்லமுத்து ஒரு காட்டு ராஜாபோல்தான். அதைவிட கோயில் மாடாகக் கூறலாம். சிறிய தேநீர்க் கடையிலிருந்து நாடார் மளிகைக் கடைவரை அவனுக்குப் பாக்கியில்தான் எல்லாம் நடக்கும். அன்று—

நல்லமுத்து தேநீர் விடுதிக்குப் பக்கத்திலிருந்த நாயர் பீடாக்கடைப் பக்கமாக நடந்தான்.

“ஏ நாயர்! ஒருகட்டு சின்ன கறீம் கொடப்பா......”

ஒரு பையனுக்கு மணிலாகேக்கை கண்ணுடிக் குப்பியினின்று எடுத்த வண்ணம் நாயர்—

“சனிப்பிடிச்ச ஆளு......ஒண்ணு இவன் இவ்விடவிட்டு ஒழியணும்; அல்ல ஞான் ஒழியணும்...” என்று முணுமுணுத்தான். பிறகு? பீடிக் கட்டுகளிலிருந்து, ஒரு பீடிக் கட்டை எடுத்து, முன்னுலிருந்த பலகை மீது தூக்கி எறிந்தான், வெறுப்பாக.

‘ஏண்டா நாயர்! உனக்கு ஏன் டாலே திமிரு.பாக்கி நிறையசேந்தா தரமாட்டேனு.......பெட்டிக் கடையைத் தூக்கி அந்தாலேயிருக்கிற கொளத்திலே வீசிப்புடுவேன்......” என்ருன் நல்லமுத்து பீடியைக் குனிந்து எடுத்தவாறே. நல்லமுத்துவின் கோபத்தை உணர்ந்த நாயர் பக்கத்தில் அடுக்கி வைத்திருந்த தீப்பெட்டிகளில் ஒன்றை எடுத்து மரியாதையுடன் நல்லமுத்துவின் முன் நீட்டினுன்.

‘எந்தா! சேடனுக்குக் கோபம்... ஏதோ மனசு சரியில்லா...நான்தாறு மாரு நடந்தா மனசுலே பதிய வேணும்...” என்ருன் பணிவுடன் நாயர்.

நாயரின் கையிலிருந்த நெருப்புப் பெட்டியைப் பிடுங்கிக் கொண்டு திரும்பி நடந்தான் நல்லமுத்து.

பீடியின் புகை மணம் அவனது மூளையைச் சுறுசுறுப்பாக்கியிருக்க வேண்டும். சிந்தனையோட்டம் மனதுள் கொந்தளிப்பை உண்டுபண்ணிற்று. வலது கையிலிருந்த பீடியை இடதுகையில் மாற்றியபின், மடியைத் தடவிப் பார்த்துக்கொண்டான். மடியை அலங்கரித்த பொருள், நோட்டுகள்தான்'அது....

அவன் இனி மேற்கொள்ளவிருக்கும் பணிக்காக பண்ணையார் சோமசுந்தரம் கொடுத்த வெகுமதி.

‘தேர்தல் களத்தில் குதித்த பண்ணையாரை, யாரோ ஒரு ஓமப்பொடி எதிர்ப்பதா? அதுவும் ஊருக்கே புதியவன், டாக்டரானுல் என்ன, பண்ணையாரை எதிர்க்கும் துணிவு எவன் கொடுத்தது.”

‘பய கால்களை முறிக்க வேண்டாமா?”

என்றெல்லாம் பண்ணையாரின் துதிபாடிகள் கொக்கரித்தனர், வன்மம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது பண்ணையாருக்கு. தேர்தல் நாள் நெருங்க நெருங்க மக்கள் சக்தி தனது எதிரியின் பக்கம் சாய்வதை அவரது இயல்பான பரம்பரைப் பாத்தியதை விடவில்லை.

‘நல்லமுத்துவின் மூலம் பயலுக்குப் பண்ணையாரோட செல்வாக்கை உணர்த்தணும்’ என்று மனதுள் கறுவிக்கொண்டார் சோமசுந்தரம்.

நல்லமுத்துவின் அடியாள் மூளையில் இவன் நல்லவன் அவன் கெட்டவன் என்ற பாகுபாடெல்லாம் ஏறுமா...? அவன் மனைவி நிறைமாத கர்ப்பிணி வேறு. சிலவிற்குப் பணம் தருகின்ருர் பண்ணையார். தனக்கே உரிய பணி இது—பின் கசக்கவா செய்யும்...?

மக்களின் அன்பினைப் பெற்ற டாக்டரான மாதவனை ஒரு கை பார்க்க நல்லமுத்து நடைபோட்டான்!

* * *

‘அன்பு! நீங்களெல்லாம் போகலாம். ரொம்பவும் களைத்துவிட்டிருக்கீங்க...நாளை தொடரலாம்...’ என்று மற்றவரிடம் விடைபெற்றுக்கொண்டு சைக்கிளில் ஏறினுன் மாதவன்.

அந்த வட்டார மக்களின் அன்புத் தொல்லையினுல்தான், தேர்தலில் அவனும் ஈடுபட்டான். நிலைமை கொடுமையான அளவுக்குச் சூடேறி வருவது அவனுக்கு ஓரளவு அரசியல் துறைமீது வெறுப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை.

‘அரசியலும் ஒரு விளையாட்டுப் போட்டி போல்தான். மைதானத்தில் இறங்கும் இரு கட்சியாளர்களின் குறிக்கோளும் வெற்றி மீதே தான் என்ருலும், முடிவில் வெற்றி பெற்றவர்களும், தோல்வியுற்றவர்களும் தங்களது உள்ளத்தில் காழ்ப்பினைக் கொள்வது கிடையாது. அரசியலிலும் அதே தன்மை உருவானுல்தான் நாட்டில் கட்சி அரசியல்களிடையே உண்மையானதொண்டு மனப்பான்மை உருவாகும். நாடு அன்றுதான் முன்னேறும்...’ என்பது மாதவனின் வேட்கை. இன்றுள்ள அரசியல் நிலைமையில் இந்த குறிக்கோள் நிறைவேறுமா?

நிலவின் ஆட்சி......!

பூ உலகின் ஒரு பகுதியைத், தனது குளிர்ந்த கிரணங்களால் அரவணைத்துக் கொண்டிருந்தது.

பக்கத்து கிராமத்தைத் தாண்டிக் கொண்டிருந்த மாதவனின் செவிகளில் “சாமீ...சாமீ...நில்லுங்களேன்” என்கிற குரல். மாதவன் சைக்கிளைவிட்டு இறங்கி நின்ருள்.

முதியவள் ஒருத்தி ஓடோடி வந்தாள் ‘சாமீ! சாமீ! எங்க பக்கத்து குடிசையிலே ஒரு பொண்ணு பிரசவ வேதனையிலே துடிக்கிறது. . மருத்துவச்சியாலே முடியலே.

சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்று ஓலமிடுகிறூர்களே, சீர்கெடுத்தது யார்? எப்படியெப்படி என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு! இதயத்தை உலுக்கும் படைப்பு!

“இதை டவுனுக்குக் கொண்டுக்கினுபோய் ஆசுபத்திரியிலே சேக்கணும்ன்னு சொல்லிட்டா......அந்தப் பொண்ணோட புருஷன் நேத்து போனவன் இன்னும் காணோம்...... பக்கத்து ஊரு டாக்டரைக் கூட்டியாரணும்...” என்றவனைப் பரிவுடன் நோக்கினான் மாதவன்.

“பாட்டியம்மா! நான்தான் அந்த டாக்டர்......அந்தப் பெண்ணோட குடிசை எங்கே......” என்றான்.

“சாமீ நீங்கதானா......கையெடுத்துக் கும்பிடறேன். வாங்க சாமீ...” என்று கூறிய மூதாட்டியிடம்—

“வாங்கம்மா போகலாம்” என்று கூறிய வண்ணம் சைக்கிளைக் கிழவியின் முன்னால் கொண்டு சென்றான்.

மாதவனின் சைக்கிளில் எப்போதும் மருந்துகளடங்கிய தோற்பை உண்டு.

நிலவு அடிவானப் பக்கம் சாய்ந்து கொண்டிருந்தது.

குடிசைக் குள்ளிருந்து வெளியே வந்தான் மாதவன்.

குழந்தையொன்றின் அழுகுரல்... பின்னிரவின் அமைதியில் மேலும் இனிமை சேர்த்துக் கொண்டிருந்தது.

“மகராஜன்! நீநல்லாயிருக்கணும் சாமீ...” என்று மாதவனை அழைத்து வந்த மூதாட்டி கரம் கூப்பினாள்.

“கவனமாகப் பார்த்துகொள்ளுங்க பாட்டியம்மா...” என்று கூறிவிட்டு சைக்கிளில் ஏறினான் மாதவன்.

சாலையின் இரு மருங்கிலும் நீண்டு வளர்ந்த ஆலமரங்களும், புளிய மரங்களும் நிலவின் ஒளிக்கற்றையை உள்ளே நுழையவிடவில்லை. இருளடர்ந்தது போன்ற நிலை.

மாதவனின் சீழ்க்கையொலி.புதிய திரைப் படத்தின் பாடலொன்று காற்றினூடே கலந்து சென்றது.

ஒரு சிறிது நேரம்தான்—

“அம்மா?” என்ற ஓலக்குரல்—நிலவின் மங்கிய ஒளியில் ஒருவன் ஓடிக்கொண்டிருந்தான்.

அவன்—நல்லமுத்துவேதான்!

* * *

தனது குடிசையிருக்கும் பகுதிக்கு விரைந்துகொண்டிருந்தான் நல்லமுத்து. இளம் குழவியின் அழுகு நல்வீணையின் நாதம்போன்று சென்று அவனது இதயத்தைப் பசுமையாக்கிற்று. கோரச் செயலொன்றினைச் செய்துவிட்டு எக்களிப்புடன் வந்தவனின் கரங்களில்—

“ஏலே! நல்லமுத்து — உனக்கு ராஜாப்பொறந்திருக்கான்டா...” நிலவின் வெள்ளையொளிக் கற்றை போன்ற கூந்தலுடைய மூதாட்டி குழவியை வைத்தாள். நல்லமுத்து குழந்தையை மலரினை ஏந்துகின்ற மங்கையைப்போலும் ஏந்தினான்.

“நல்லமுத்து! காலையிலேயே வள்ளி உன்னெ சுருக்கா வந்திடச் சொன்னாளாமே, உன்னோட ஊரு சுத்தற புத்தி என்னைக்குத்தான் போய்த்தொலையுமோடா...?” என்று கடிந்துகொண்டிருந்தாள் அம்முதியவள். மகனை அரவணைத்த வண்ணம் போதையில் ஆழ்ந்து கிடந்தவன்—

“இன்னையோட வேலை சரிபாட்டி. இனிமே என் ராஜாப்பயலவுட்டுட்டு நான் எங்கனே போகமாட்டேன்” என்று கூறினான். சற்றுமுன் டாக்டர் மாதவனை மண்ணில் சாய்ந்த நிகழ்ச்சியை நினைத்தான். உள்ளம் ஒருமுறை பதறத்தான் செய்தது. இதற்குள் அந்த மூதாட்டி,

‘டேய்...அந்த டாக்டருமட்டும் இன்னேரம் வராமெப் போயிருந்தார்ன்னா இரண்டு ஜீவன்களையும் நாமெ கண்ணாலே உசிரோடப்பார்த்திருக்க முடியுமா?”

“யாரது டாக்டர்...” என்று கேட்டான் நல்லமுத்து. அவனுடைய பதற்றத்திற்குக் காரணம்தான் உண்டே...!

“அதான்...வர்ர எலெக்ஷன்லே நிக்கறத்துக்கு ஓட்டுக்கேட்டாரே அந்த டாக்டருதாண்டா...மனுஷன் சமயத்திலே கடவுள்மாதிரிதான் வந்தார். போகும்போது கூட காலணா கேட்கலே—அந்த உத்தமப் புள்ளெவராமெ இருந்திருந்தா... ஏலே...நம்ம குப்பத்து ஓட்டுக்களெயெல்லாம் நாமே வாங்கித்தர வேண்டியதுதான்...”

நல்லமுத்துவிற்கு வானமே இடிந்து தனது தலையிலேவிழுந்தது போன்ற பிரமை.

“இத்தகைய குணக்குன்றையா நான் வீழ்த்திவிட்டேன்...” பாட்டியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு வந்தவழியே பறந்தான்.

மாதவன் வீழ்ந்துகிடந்த இடத்தை அடைந்தவுடன் நல்லமுத்துவிற்கு வியப்பும் திகைப்பும் உண்டானது.

அங்கே—

மாதவன் இல்லை!

மறுநாள் காட்டூர் கிராமமே அழுதது என்றே கூறலாம் — டாக்டர் மாதவன் அந்த கிராமத்திற்கே ஒரு புத்துணர்வையும் பொலிவையும் ஊட்டியிருந்தார்.

“அநியாயமாக வெட்டிக் கொலை பண்ணிட்டானுங்களே — பாவிங்க. உருப்படுமா அவன் குடும்பம்” ஊரே கண்ணீர்விட்டது.

மக்கள் வெள்ளம்போல் சவ ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊரின் மற்றொரு கோடியில் காவலர் வண்டியில் நல்லமுத்துவும், பண்ணையார் சோமசுந்தரமும் கைது செய்யப்பட்டு, விலங்கிட்ட நிலையில் போய்க்கொண்டிருந்தனர்.

நல்லமுத்து மனதிற்குள்ளாக ஒருமுறை மாதவனை வணங்கிக்கொண்டான்; அவன் கண்களிலே நீர்...

“இதுவரை நான் கொடியவர்களைத்தான் வீழ்த்திக்கொண்டிருந்தேன். இன்றோ அறத்தையே வீழ்த்திவிட்டேனே......”

என்று மனதிற்குள்ளாகக் கூறிக் கொண்டிருந்தான்.

❀

இதோ ஒரு சாட்சி

******

மக்கள் குறைகளைத் தீர்ப்பதில் அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்; மக்கள் குறைகளை மாவட்ட அளவில் அதிகாரிகள் தீர்த்துவிட்டால் மக்கள் தமிழக அரசு தலைமைச் செயலகத்தைத் தேடி அலையவேண்டியிருக்காது.

தமிழ்நாட்டில் காவல்துறை நல்ல முறையில் செயல்படுகிறது; குற்றங் குறைகள் அதிகரிப்பது தடுக்கப்பட வேண்டும்.

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட சில மாநிலங்களில் இராணுவம் வரவழைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்; ஆனால், தமிழகத்தில் அப்படி ஏதும் நடக்கவில்லை. இதற்கு இங்குள்ள முதலமைச்சரும் காவல் துறையினரும்தான் காரணம்.

உஜ்ஜல்சிங்
தமிழக கவர்னர்.

நாற்றங்கால்!

பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகம் வழங்கும் விழாவைதமிழகத்திலுள்ளோர்மட்டுமல்ல; துணைக் கண்டத்திலுள்ளோர் அனைவரும் கூர்ந்து கவனித்து பின்பற்றத் தக்கதாய் அமைத்திருக்கின்றனர் மாநகராட்சியிலுள்ள நண்பர்கள்.

சென்னை மாநகராட்சி பல சாதனைகளைச் செய்து பிறருக்கு வழி காட்டுவதுபோல்—இந்தக் காரியத்திலும் பிறர் பின்பற்றத் தக்க முறையில் நடந்து கொண்டிருக்கிறது.

குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்களையும் எழுதுகோல்களையும் தரும்போது இவ்வளவு வசதியுடன் இருக்கும் காலத்தில் நாமெல்லாம் படிக்கவில்லையே—என்ற ஏக்கம் நமக்கு இருந்திருக்கலாம்.

நமக்குக் கிடைக்காத நல் வாய்ப்பு நமது பிள்ளைகளுக்குக் கிடைத்திருக்கிறது என்று நாம் பெருமைப்பட வேண்டும்.

இந்த இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதில் இவ்வளவு தொகை செலவாகியிருப்பது என்பதைவிட—பள்ளிப் பிள்ளைகளின் கல்வியில் எவ்வளவு தூரம் மாநகராட்சி அக்கறை காட்டுகிறது என்பதைக் கவனிக்கவேண்டும்.

கல்வியறிவு பெறத் துடிப்போருக்கு அவர்கள் ஏழைகள் என்பதால் கல்வி தடைப்படாமல் இருக்க ஏற்பாடு செய்யவேண்டியது நல்லெண்ணமுள்ளோரின் கடமையாகும்!

இந்நிலேகூட மாநகராட்சியிலுள்ள எனது நண்பர்கள் முந்திக்கொண்டார்களே என்பதில் எனக்கு மகிழ்ச்சி உண்டு.

இந்த வழியைப் பின்பற்றி நகராட்சிகளும் தங்கள் வசதிக்கேற்ற அளவு ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகம் அளிக்கும் பணியில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் முத்துசாமி பேசுகையில் பள்ளியில் பயிலச் சொல்லும் பிள்ளைகளைப்பார்த்து நான் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்கள்.

உண்மைதான்எனக்குக் குழந்தைகளைப் பார்க்கும்போது எதிர்காலத்தையே பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுவது உண்டு!

நமது வாழ்க்கையிலுள்ள துன்பதுயரங்களும்—நலிவும் மெலிவும் நீக்கப்பட்ட எதிர்காலத்தை அந்தக் குழந்தைகளின் உருவில் காண்கிறேன்.

ஒவ்வொரு பள்ளியிலும் நுழையும் பிள்ளைகள் கல்வி கற்று மருத்துவர்களாகவும் வழக்கறிஞர்களாகவும் மாறி வாழ்வில் ஏற்றம் பெறவேண்டும்!

அந்தப் பிள்ளைகளின் மூலம்தான் நமது நாட்டிலுள்ள இருள் நீக்கப்படும்! கஷ்ட நஷ்டங்கள் துடைக்கப்படும்!

வயலுக்கு நாற்றங்காலில் பயிரை வளர்ப்பார்கள். அதுபோல் எதிர்கால வயலுக்கு ஏற்ற நாற்றங்கால் பயிராக பள்ளிப் பிள்ளைகள் இருக்கிறார்கள்!

நாற்றங்கால் பயிர்—பார்ப்பதற்குப் பச்சைப் பசேல் என்று பசுமையாக இருப்பது மட்டுமல்ல; அதை நன்றாக வளர்த்து விரிவான வயலில்—முறையாக நட்டு—ஒழுங்காக வளர்த்தால்—தரமான பயன் கிடைக்கும்.

அதுபோல் பள்ளிப்பிள்ளைகள் எனும் நாற்றங்கால் பயிரை—நன்றாக—முறையாக ஒழுங்காக வளர்த்துவரும் ஆசிரியர்கள் இந்த நாட்டின் பாராட்டுக்குரியவர்கள்.

இந்த நாட்டிற்கு நிரந்தரமான செல்வத்தைத் தேடித் தருபவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால் அது—ஆசிரியர்கள்தான்!

நிலையான செல்வத்தை— அழியாத செல்வத்தை—விலை மதிக்கமுடியாத செல்வத்தைத் தேடித்தரும் ஆசிரியர்களை எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்!

இலவசமாகப் புத்தகங்களைப் பெறும் பிள்ளைகளுக்கு ஒன்று கூறிக் கொள்வேன்!

ஏழ்மை நிலையிலும் பெற்றோர்கள் எவ்வளவோ இன்னல்களையும் — இடுக்கண்களையும்—இழப்புக்களையும் தாங்கிக்கொண்டு நம்மைப் படிக்கவைக்கிறார்கள் என்றபொறுப்புணர்ச்சியுடன் நல்லமுறையில் பிள்ளைகள் கல்வி கற்கவேண்டும்.

ஆசிரியர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்று கூறிக்கொள்வேன்!

எவ்வளவோ ஏழ்மை நிலையிலும் பிள்ளைகள் நம்மிடம் படிக்க வருகிறார்கள். அவர்களின் ஏழ்மையையும் அறியாமையையும் போக்கும் விதத்தில் சீரிய முறையில் பாடங்களைக் கற்பிக்க வேண்டும்!

அவ்விதம் பாடங்களை ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள் என்பதை இப்போதும் காண்கிறேன்; பெருமை அடைகிறேன்.

இலவசப் பாடப்புத்தகம் வழங்கும் விழாவை இவ்வளவு ஆர்வத்துடன் செய்து முடித்த மாநகராட்சியின் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும், குழுக்களின் தலைவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாராட்டுதலுக்குப்பின் என்னென்ன பொருள் இருக்கும் என்பதை உணர்ந்துதான் பாராட்டுகிறேன்.

இந்த நல்ல காரியத்தைச் செய்து முடித்துவிட்டு மான்யத்திற்கும் உதவிக்கும் அவர்கள் வருவார்கள்.

நிதிவசதி இடம் கொடுத்தால்—நல்ல காரியத்தைச் செய்து முடிக்க மான்யம் தருவதில்—உதவி தருவதில் தட்டாமல் செயல்பட நான் விரும்புகிறேன்

குறிப்பாக மாநகராட்சியினர் வேண்டுகிற நியாயமான உதவிகளைச் செய்வதில் நான் தயக்கம் காட்டியதில்லை.

ஏனென்றால்—கொடுக்கப்படும் பணம் சீரான வழியில் மாநகராட்சியின் நிர்வாகத்தால் செலவிடப்படும் என்று நம்புகிறவன் நான்!

அவர்கள் எவ்வளவு கேட்டாலும் கொடுப்பதற்கு விருப்பம் உள்ளவன் நான். ஆனால் கொடுப்பதிலும் சில கட்டுத் திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே அவர்களும் கேட்க வேண்டியதைத்தான் கேட்பார்கள்! நானும் கொடுக்கவேண்டியதைத்தான் கொடுப்பேன்.

ஆனால் நல்லெண்ணத்தை வழங்குவதில் எந்த அளவும் இருக்க முடியாது.

ஏனென்றால் உலகிலேயே கேட்பதைவிட அதிகமாகத் தர முடிந்ததும், கொடுப்பதைவிட அதிகமாக எடுக்க முடிந்ததும் நல்லெண்ணம் ஒன்றுதான், ஆகவே அந்த நல்லெண்ணத்தை இந்த நல்ல வேளையில் தாராளமாக வழங்குகிறேன்.

—முதலமைச்சர் அறிஞர் அண்ணா.

பாண்டியன் திருமேனி

கே. ஜி. இராதாமணாளன்

3—14

உண்மை தாழுடியுமா?

'உண்மையிலேயே கல்லைத் தூக்கி என் தலையில் போடுவாயா?' என்று வியம்பும் வேதனையும் கலந்த குரலில் தூமகேது கேட்டான்.

'அப்படித் தூக்கிப் போட்டாலும் என் தலையில் ஏற்றிக்கொண்ட பாப மூட்டையை என்னால் இறக்கிப் போட முடியாதே!' என்று தழ தழத்த குரலில் கூறியபடி செந்தாமரை பொன்னையாவின் உருவப் படத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

பாப மூட்டையை நீ ஏற்றிக் கொண்டாயா?'

'இல்லை! நீங்கள் ஏற்றிவிட்டீர்கள்!'

'எதனாலோ நீ மிகவும் குழப்பமடைந்துவிட்டிருக்கிறாய் செந்தாமரை!'

'ஏன் தங்களிடம் மறைத்து மறைத்துப் பேசவேண்டும்! உண்மையைச் சொல்லிவிடுகிறேன்! என் உள்ளத்திலுள்ளதை வெளியே கொட்டிவிடுகிறேன்!'

'அதுதான் நல்லது!'

'நல்லதோ கெட்டதோ-அப்படிச் சொன்னால்தான், என்னை மேலும் தாங்கள் தொல்லையில் தள்ளத் துணியமாட்டீர்கள்! கேளுங்கள்! சோலையப்பன் கொல்லப்பட்டது யாரால்?......'

'உன்னால் என்று மனதைக் குழப்பிக்கொள்ளாதே, செந்தாமரை! கல்லறையை அவனுக்குத் தேடித் தந்தது, நீயோ நானோ அல்ல—தனக்குத்தானே அவன் கல்லறையைத் தேடிக்கொண்டான்! அவன் செய்த அடாத செயல், அவனைக் கொன்றது!......!'

'இல்லை ஒற்றர் நாயகமே இல்லை! அவரைக் கொன்றது நான்தான்! என்னால்தான் அவர் பிணமானார்! அவரைப்பற்றிய இரகசியங்களைக் கண்டறிந்து நான் சொல்லாமலிருந்திருந்தால் உம்மால் அவரைத் தொடக்கூட முடிந்திருக்காது! பாண்டிய மண்டலத்தின் ஏற்றத்திற்காக உயிரையே தியாகம் செய்த உத்தமரின்—அஞ்சா நெஞ்சர் ஆளவந்தாரின்—அருந்தவ மகனார் சாகவில்லை. கொல்லப்பட்டார்! வேறு யாராலும் அல்ல! என்னால் — என் காதலால் — அந்த வீர இளைஞர் கோர மரணமடைந்தார்! ஒற்றர் நாயகமே அதை நினைத்தாலே என் மனம் குழம்புகிறது!...'

'ஏன் நினைக்கிறாய்—மறந்துவிடு!'

'எவ்வளவு சுலபமாக மறந்துவிட்டீர்! அந்த மாபெரும் பாதகச்செயலை நான் மறந்தாலும்—நாடுமறக்காதே! என்றென்றைக்கும் அழியாத பழியை அல்லவா நான் தேடிக்கொண்டேன்! காதலியைப்போல நடித்து, கணவனாகவும் அவனை ஏற்று, கடைசியில் கயிற்றிலே பிணமாகத் தொங்கவிட்டாள் காதகி — என்றல்லவா எதிர்காலம் என்னை ஏசும்— ஏடுகள் என்னைப் பழிக்கும்! அந்த ஏசலுக்கும் பழிக்கும் என்னை ஆளாக்கிவிட்ட — சாகசக்காரி என்ற சொல்லுக்குப்பதில், செந்தாமரை என்ற பெயரை இனி ஏட்டிலும் பயன்படுத்தலாம் என்ற அளவிற்கு என்னைக் கொடுமைக்காரியாக மாற்றிவிட்ட — தங்கள் தலையில் நான் ஏன் உண்மையிலேயே கல்லைத் தூக்கிப்போடக்கூடாது? செந்தாமரை கொடுமைகள் செய்தாள்—கடைசியில் அந்தக் கொடுமைகளைச் செய்யத் தூண்டிய காதகனின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுக்கொன்றாள் — என்ற நற்பெயராவது நான் எடுக்கலாம் அல்லவா?'

'ஏதேதோ உளறுகிறாய், செந்தாமரை!'

'உலறுகிறேனா?'

'வேறு என்ன?.........செந்தாமரை கலங்காதே! நல்லவனைக் கொன்றிருந்தால் நீ கலங்குவதில் அர்த்தமுண்டு! சோலையப்பன் நல்லவனோ உத்தமனோ அல்லன்! அவன் நாட்டிற்குக்கேடு செய்ய—அரசருக்குத் துரோகம் புரியத் துணிந்தான்! சைவத்திற்கு எதிரியாகமுளைத்தான்! அவனைக் கொல்ல நீ உதவி செய்தாய்! அதற்காக உன்னை எதிர்காலம் ஏசாது, ஏடுகள் பழிக்காது— மாறாக எதிர்காலம் உன்னை ஏற்றிப் போற்றிப் புகழப்போகிறது, ஏடுகள் உன் துணிவையும் தொண்டையும் பற்றி பண்ணிசைக்கப்போகின்றன! சைவ நாயன்மார்களின் பெயர் வரிசையில், உன் பெயரையும் வைத்துத் தொழப் போகிறார்கள் மக்கள்! குழப்பமடையாதே—நிமிர்ந்து உட்கார்! சைவத்திற்குத் தொண்டாற்றுகிறோம் என்ற பூரிப்பை, உள்ளத்தில் ஏற்றிக்கொள்! நாட்டில் நல்லதொரு சமயம் பரவ, அருந்தொண்டாற்றுகிறோம் என்ற களிப்பிலே துள்ளியெழு!......'

இவ்வாறு தூமகேது அடுக்கிக் கொண்டு சென்ற நேரத்தில், 'நாம் யார் என்பதை இவனிடம் சொல்லிவிடலாமா?' என்று ஒருகணம் செந்தாமரை நினைத்தாள். அவசரப்படக் கூடாது. இன்னும் சில நாட்கள் செல்லட்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, உட்கார்ந்திருந்தவள் எழுந்தாள்.

'ஏன் செந்தாமரை. என் பேச்சு உன் காதில் விழவில்லையா?' என்று கேட்டபடி தூமகேது நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'கேட்கிறது ஒற்றர் நாயகமே கேட்கிறது!'

'இதை உன் மனதிலேயே போட்டுவை, செந்தாமரை! சைவம் வளர எது வேண்டுமானாலும் செய்யலாம் — ஒரு பாவமும் உன்னை அண்டாது!'

'சரி!'

'சரி என்றால் போதாது செந்தாமரை — தயார் என்று சொல்! சைவத்திற்கு மிகவும் நெருக்கடியான நேரம் இது! திருமேனி மதுரை மண்ணில் அடியெடுத்து வைத்துவிட்டாள்! பௌத்தர்கள் பூரிக்கிறார்கள்! சைவத்திற்குக் கல்

லறை அமைக்க இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று அந்த மொட்டைத் தலையர்கள் தயாராகிருர்கள்! செந்தாமரை! ஆபத்து வந்திருக்கும் இந்தநேரத்தில் அயர்வோ ஆயாசமோ கொள்ளக்கூடாது? தீவிரமாக வேலை செய்யவேண்டும்! அவசியம் ஏற்பட்டால் ...... பயப்படாதே!...திருமேனியைக்கூட நாம் கொலை செய்ய வேண்டியிருக்கும்! என்று சொல்லிவிட்டு அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

'கொலை!' என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

உடனே தனக்கும் சோலையப்பனுக்கும் முன்பொரு சமயத்தில் நடைபெற்ற உரையாடல் அவள் உள்ளத்தில் ஓடிவந்து நின்றது.

'வெறுத்து ஒதுக்க வேண்டியவர் என்று உம்மைப் பற்றி முடிவு செய்த போதிலும், நீங்கள் கவலைப்படுவதைப் பார்க்கும்போது, எனக்கும் கவலை உண்டாகிறது! இதற்காகத்தான் பெண்களைப் பெரியவர்கள் பேதையர் என்றனர் போலும்!'

'ஒத்த மனமும் குணமும் கொண்டவர்களின் இலட்சணம் அது அன்ருே!'

'என்ன காதல் நாடகம் ஆரம்பமாகிறதா?'

'மூடமதி கொண்டதிருல் முன்பு நாடகமாடினேன்! இப்பொழுது நான் உதட்டால் பேசவில்லை! உள்ளத்தின் அடித்தளத்திலிருக்கும் நாக்கை அசைத்துப் பேசுகிறேன்!'

'படமெடுத்தாடும் பாம்பு நான்! அது தெரியாமல் என் எதிரில் கூத்தாடிக் கத்தும் தவளையாகிறீர் தாங்கள்!'

'என் முட்டாள்தனத்தை அடிக்கடி குத்திக் காட்டி, என்னைச் சித்திரவதை செய்யாதே, செந்தாமரை! புத்த சமண மதத்தவரை—பகுத்தறிவுச் செம்மல்களை—வெட்டி வீழ்த்தி அவர்களின் இரத்தத்தால், சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் அந்தத் தூமகேதுவின் அக்கிரமங்கள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன!'

இப்பொழுது அந்த உரையாடல் செந்தாமரையின் நினைவிற்கு வந்ததும், 'வஞ்சகா! திருமேனியையா கொலை செய்யவேண்டும்?' என்று கேட்பதைப்போல, அவனைப் பார்த்தாள்.

'புத்த' சமண மதத்தவரை — பகுத்தறிவுச் செம்மல்களை—வெட்டி வீழ்த்தி அவர்களின் இரத்தத்தால், சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் தூமகேதுவின் அக்கிரமங்கள் ......' என்ற சோலையப்பனின் இவ் வார்த்தைகள் அவள் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

'ஒற்றர் நாயகமே, நாளை வந்து உம்மைச் சந்திக்கிறேன்!' என்று கூறிவிட்டு அவ்வறையினின்றும் அவள் திடீரென்று வெளியே சென்றுவிட்டது, அவனுக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தந்தது.

'பேதைப் பெண்! எதைஎதையோ எண்ணி மனத்தைக் குழப்பிக்கொண்டிருக்கிருள்! இன்னும் சில தினங்களில் சரியாகி விடுவாள்!' என்று முணு முணுத்தபடி தூமகேது அவ்விடத்தைவிட்டு வெளியே சென்ருன்.

அவன் வெளியே சென்றுவிட்டதும், 'அம்மா! தங்களை உடனே அரண்மனைக்கு வரும்படி இலங்கை இளவரசி திருமேனி ஓலை அனுப்பி இருக்கிருள்!' என்று சிதாரி அந்த ஓலையை செந்தாமரையிடம் தந்தாள்.

செந்தாமரை அந்த ஓலையை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, 'எதற்காக இவள் என்னைப் பார்க்க வேண்டுமாம்?' என்று கேட்டாள்.

'எனக்கு எப்படி அம்மா தெரியும்?'

'இப்பொழுது வர சரிப்படாது என்று ஓலை கொண்டுவந்தவனிடம் சொல்லி அனுப்பிவிடு!'

'இதென்னம்மா, இப்படிச் சொல்கிறீர்கள்! அவனிடம் நான் சொல்லி அனுப்பிவிட்டேன்!...'

'என்னவென்று?'

'இன்னும் சிறிது நேரம் கழித்து வருவதாக!'

என்னைக் கேட்காமல் உன்னை யார் அப்படிச் சொல்லி அனுப்பச் சொன்னது? சரி வேருெரு ஆள் வசம் சொல்லிஅனுப்பு, இப்பொழுது உடல் நலம் சரியில்லை, பிறகு பார்க்க வருவதாக!'

'வேண்டாம் அம்மா — நீங்கள் போய்ப் பார்த்துவிட்டு வருவதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்! என் சொல்லை எத்தனையோ முறை தட்டியிருக்கிறீர்கள். இந்த முறையாவது என் விருப்பப்படி நடந்துகொள்ளுங்கள்! திருமேனி



யோடு தொடர்பு வைத்துக் கொள்வது — தூமகேதுவை எதிர்க்கப் போகும் பணிக்கு மிகவும் உதவியாக இருக்கும்! நாமே ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை, திருமேனியே ஏற்படுத்தித் தருகிருள் — அலட்சியப் படுத்தாதீர்கள், அம்மா!'

'நான் ஆடினேனே—அந்த ஆட்டத்தைப் பாராட்ட அழைத்திருப்பாள்!'

'இருக்கட்டுமே, அம்மா! அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு திருமேனியின் அன்பைத் தாங்கள் பெறலாம் அல்லவா?'

'அவள் அன்பைப் பெற்று இனி நமக்கு ஆகவேண்டியது என்ன இருக்கிறது, சிதாரி?'

திருமேனியோ பௌத்த மதத்தைச் சேர்ந்தவள்! இயற்கையாகவே தூமகேதுவின் மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கும்! அதை அதிகமாகத் தூண்டிவிட்டு, அந்தப் பாதகனை ஒழிக்க வழி தேடலாம் அல்லவா? அம்மா, என் விருப்பத்தை அலட்சியப்படுத்தாதீர்கள்! திருமேனியைப் போய்ப் பாருங்கள்!' என்று சிதாரி கெஞ்சினுள்.

சிதாரியின் சொல்லைத் தட்டித் தட்டிதான் இந்தநிலைக்கு வந்தோம். இனியும் தட்டக்கூடாது என்ற எண்ணத்தோடு, செந்தாமரை அரண்மனைக்குப் புறப்படத் தயாரானுள்.

செந்தாமரை எதிர்பார்த்ததைவிட அதிக அன்போடும் மரியாதையோடும் அவளைத் திருமேனி வரவேற்ருள்.

'ஒரு சாதாரண நாட்டியக்காரியிடம், இவ்வளவு அன்பு காட்டும் தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இளவரசியாரே!' என்று புன்னகையோடு செந்தாமரை சொன்னதும், 'யார் செந்தாமரை, சாதாரண நாட்டியக்காரி?' என்று திருமேனி அவள் தோளின் மீது கையைப் போட்டுக்கொண்டு கூறினுள்.

திருமேனியின் போக்கு செந்தாமரைக்கு ஆச்சரியத்தைத் தந்தது. நீண்டநாள் பழகிய தோழியைப் போலத் தோளின்மீது கையைப் போட்டுக்கொண்டு பேசுகிருள் என்று எண்ணியதும் அவள் ஆச்சரியம் இன்னும் அதிகமாயிற்று.

''நான் சாதாரண நாட்டியக்காரிதான்—இதில் என்னம்மா தங்களுக்குச் சந்தேகம்?''

''நீ நாட்டியமாடியபோதுபார்த்த முகத்தைவிட இப்பொழுது அதிக மாற்றமடைந்திருக்கிறதே செந்தாமரை!'' என்று திருமேனி பேச்சை மாற்றினுள்,

''மனித வாழ்க்கையில் திடீர்திடீர் என்று எவ்வளவோ மாற்றங்கள் ஏற்படுகின்றன அல்லவா?''

''எதற்காகச் செந்தாமரை, பொதுவாக மனித வாழ்க்கை என்கிருய்—காதல் வாழ்க்கையில் என்று சொல்லேன்!''

''செந்தாமரை திடுக்கிட்டாள்! 'காதல் வாழ்க்கை!' என்று முணுமுணுத்ததும், அவள் கண்கள் கலங்கின.

''எல்லாம் எனக்கு அரசர் கூறினுர்.

'அரசர் கூறினுரா...?''

''ஆச்சரியம் அடையாதே செந்தாமரை! கண்ணீரைத் துடைத்துக் கொள்! இந்தப் பாண்டியமண்டலம் யாரால் சிறப்பு அடைந்ததோ, அந்த உத்தமரின் மகனைக் கணவனுக அடைந்தவள் அல்லவோ நீ?''

''அந்த ஒளிவிளக்கை அணைத்துவிட்டாரே அம்மா, அரசர்!'' என்று சொன்னதும், செந்தாமரையின் துக்கம் அதிகமாயிற்று.

''வருந்தாதே, செந்தாமரை?''

''ஆமாம் இளவரசியாரே, சாவைத் தவிர, இனி வருந்தி ஒரு பயனும் இல்லை!''

''மனத்தை தைரியப்படுத்திக் கொள், செந்தாமரை!''

''ஆமாம் அம்மா மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டுதான் உயிர் வாழ்கிறேன் — என் கணவரால் ஈடேற்ற முடியாமல்போன இலட்சியத்தை ஈடேற்ற! காதல் பிரிவு எவ்வளவு வேதனை தரும் என்பதை உங்களுக்கு நான் சொல்லத் தேவை இல்லை! என்னுடையது 'பிரிவு' அல்ல அம்மா, 'முடிவு!' காதல் செத்துவிட்டது! செத்துவிட்டது அம்மா, என்னுடைய காதல் செத்துவிட்டது! என்னுடைய உயிர் கல்லறையில் அடைபட்டுவிட்டது! நான் கட்டிய கோட்டைகள் சிதறிவிட்டன! அப்படிச் சிதறிய மண்ணின்மீதும் கல்லின் மீதும் நான் பிணமாக நடந்துகொண்டிருக்கிறேன்!'' என்று தேம்பிக்கொண்டே செந்தாமரை கூறிவிட்டு கண்களை மூடிக்கொண்டாள்.

ஓவியர் தேவை

''காஞ்சி'' வார இதழில் முழுநேர ஊழியராக இருந்துப் பணியாற்ற ஓவியர் ஒருவர் தேவை. மாதிரிகளுடன் விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்,
''காஞ்சி''
காஞ்சிபுரம்.

என் உதவி எப்போதும் உனக்கு உண்டு. செந்தாமரை!'

'உங்கள் ஓலையைப் பார்க்கும் போதே அதை நான் தெரிந்து கொண்டேன் இளவரசியாரே! ஓலையைப் படித்து முடித்ததும், அங்கேயிருந்த எழுத்துக்கள் மறைந்துவிட்டன—அங்கே தங்களது கருணை ததும்பும் முகம் தோன்றி எனக்கு ஆறுதல் சொல்லியது! அதனுலும் என் தோழி சிதாரியின் வற்புறுத்தலினுலும்தான் அம்மா இன்று உங்களைப் பார்க்க வந்தேன்; இல்லாவிட்டால் நான் வந்திருக்கவே மாட்டேன்! நீங்கள் மட்டுமல்ல—ஆண்டவன் என்கிருர்களே, அவனே உதவி செய்வதாகச் சொல்லிக்கொண்டு எதிரில் வந்தால்கூட, என் கணவரை எனக்குத் திருப்பித் தர முடியாதே அம்மா!' என்று செந்தாரை சொல்லி முடித்ததும் 'ஏன் செந்தாமரை, என்னுல் கூடவா முடியாது!' என்று கேட்டுக்கொண்டே குலசேகரன் அங்கே வந்தான்.

அரசனின் குரலைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டுப்பார்த்தாள்.

'ஆண்டவனுல் சோலையப்பனைத் திருப்பித்தர முடியாமல் போகலாம், செந்தாமரை—இந்தக் குலசேகரனுல் திருப்பித்தரமுடியும்!' என்று அவன் புன்னகையோடு கூறிக்கொண்டே அவர்கள் அருகே வந்து நின்ருன்.

உம்மால் தரமுடியுமா?' என்று செந்தாமரை தேம்பிக் கொண்டே கேட்டாள்.

[வளரும்]

4- பக்கத் தொடர்ச்சி

தர்கள் வாழ்ந்து வந்ததாகக் கூறப் படுகிறது. சித்தர்களைப் பற்றியும், இம்மலையின் சிறப்பைப்பற்றியும் பண்டைய நூல்கள் பலவாருகப் புகழ்கின்றன. இம்மலையின் ஒரு பகுதி கருங்காடு என அழைக்கப்படுகிறது. இந்தப் பாகத்தில் சித்து செய்யத் தகுந்த மூலிகைகளும் காய சித்தி மூலிகைகளும். முக்காலம் உணர்த்தும் மூலிகைகளும், பரகாய பிரவேசம் செய்யத்தகுந்த மூலிகைகளும் இன்றும் இருக்கின்றனவாம். இம் மூலிகைகளைத் தேடிப் பல திசைகளிலிருந்தும் ஞானிகள் கஞ்சமலைக்கு வந்து சென்றதாகப் பழந் தமிழ் நூல்களான திருமந்திரம், நந்திநூல், கொங்குமண்டல சதகம். சிறுபாணாற்றுப்படை, புறநானூறு, வடமலை வெண்பா, ஔவை தனிப் பாடல், கொங்குமண்டல சதகக் கைப்பிரதி, திருமூலர் வரலாறு ஆகிய பத்து நூல்கள் உணர்த்துகின்றன. இம்மலையின் பச்சிலைகள் மக்களின் பிணிகளைத் தீர்த்து வாழ் நாளை நீடிக்கக்கூடியவை என்று இவ்விலக்கியங்களில் இருந்து அறிகிரும்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களின் அறிவிப்பு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடக்க இருப்பதை ஒட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விருப்பத்திற்கிணங்க இளங் கவிஞர்களுக்கான கவிதைப் போட்டித் திட்டம் ஒன்றை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன். ''புகாரில் ஒரு நாள்'' என்ற தலைப்பில் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற பூம்புகார்பற்றி 100 வரிகளுக்கு மேற்படாமல் கவிதைகள் புனைந்து இளங்கவிஞர்களால் அனுப்பப்பட வேண்டும். வரப்பெற்ற கவிதைகளில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் முதற் பரிசு வழங்கப்படும்.

பூம்புகாரின் சிறப்பு அம்சங்கள்பற்றி கவிதைகள் புனையப்பட வேண்டும்.

இக்கவிதைகள் எல்லாம் ''தனி அலுவலர், உலகத் தமிழ் மாநாட்டு அலுவலகம், சவுதரி காலனி, சென்னை-34'' என்ற முகவரிக்கு 1967 செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் நல்ல முறையில் எழுதப்பட்டு கவி புனைந்தவரின் தெளிவான முகவரியுடன் அனுப்பப்படவேண்டும்.

பரிசு பெற்ற கவிதை மாநாட்டுச் சிறப்பு மலரில் வெளியிடப்படும்.

(ஒப்பம்) மா. முத்துசாமி,
உள்ளாட்சித்துறை அமைச்சர்.

இம்மலையின் கனிப்பொருள்களைப் பற்றி 1864ல் ஆராய்ச்சி நடத்திய புவியியல் நிபுணர்களான ''கிங்'' என்பவரும் ஃபுட். என்பவரும், இம் மலையில் முக்கியமாக மூன்று படுகைகள் இருப்பதாகவும், அவையனைத்தும் மலையைச் சுற்றி எல்லாத் திசைகளிலும் அமைந்திருப்பதாகவும் கூறுகின்றனர். ஆனால் எனக்கு இம்மலையின் கனிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வாய்ப்புக் கிடைத்தபோது, இப்படுகைகளை ஆழ்ந்து கவனித்தேன். ''கிங்கும், ஃபுட்டும்'' குறிப்பிட்டபடி மூன்று படுகைகள் இருந்தாலும் அவைகள் தொடர்ந்து மலையைச் சுற்றிலும் ஓடுகின்றனவா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது. ஆகவே, நான் இதை விளக்கும் போது தனித்தனியான ஏழு படுகைகளாக விவரித்திருக்கிறேன்.

சில இடங்களில் இக்கனிப் பொருள்கள், அருவிநீரால் வழவழப்பாக்கப்பட்ட இரும்புக் கனியைக் கொண்ட சிறுசிறு கற்கள் சூரிய ஒளிபட்டு மின்னுவதைப் பார்க்கும் போது ''ஒளியிழந்த நாட்டிலே ஒளி சிறக்க வந்தனை வா வா'' என்று வரவேற்கத் தோன்றும்.

இயற்கையின் சீற்றத்தால் பல உயர்நிலைப் படுகைகள் உடைக்கப்பட்டு உருண்டு கீழே விழுகின்றன. இவை ஆற்று நீராலும் மழை நீராலும் மலையடிவாரத்திலுள்ள நிலங்களில் ஒதுக்கப்படுகின்றன. இவ்விதம் சிதறிக் கிடைக்கும் கனிப் பொருள்களைச் சேகரித்து உருக்கினால் மட்டும், சில திங்களுக்குத் தொடர்ந்து வேலையிருக்கும் என நிபுணர்கள் கூறுகிருர்கள். கஞ்சமலையில் மட்டும் 55 டன்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சேலத்தில் நவீன முறைப்படி இரும்பு உருக்கு ஆலை அமைவதற்கான முதல் முயற்சி 1918ஆம் ஆண்டிலேயே எடுக்கப்பட்டது என்பதை அறிய நம்மில் பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

திரு. ஜோசய்யா மார்ஷல் ஹீத் என்ற வெள்ளையர் கிழக்கிந்தியக் கம்பெனியின் பெரிய உத்தியோகஸ்தர்களில் ஒருவர். உத்தியோக நிமித்தமாக 1918இலிருந்து 1922 வரை நான்கு ஆண்டுக் காலம் அவர் சேலத்தில் வாழ நேர்ந்தது. சேலத்தில் குன்றாத தரமும், குறையாத அளவும் மிக்க இரும்புக் கனிகள் மண்டிக் கிடப்பதையும், அக்கனிகளை நாட்டு உலைகளில் இட்டுச் சேலத்துப் பழங்குடி மக்கள் உயர் தர இரும்பு தயாரித்த வரலாற்றையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அவற்றை நேரில் காண்பதற்கு அவருடைய சேலத்து வாசம் வழிவகுத்தது. வேலை முடிந்து மாலை வேளைகளில் உலைகள் இருக்கும் பகுதிகளுக்குச் சென்று அவைகளின் உதவிகொண்டு தயாரித்த இரும்பைச் சேகரித்து அவற்றைப் பற்றிப் சிறுசிறு ஆராய்ச்சிகளைத் துவக்கினுர். இவ்வாராய்ச்சிகளின் மூலம். சேலத்து இரும்புக்கனிகள் உலகத்தின் ஏனைய பாகங்களில் கிடைக்கும் மிகச் சிறந்த இரும்புக் கனிகளுடன் ஒப்பிடக்கூடியவை என்பதை அறிந்தார். சேலத்து இரும்புக் கனிகளின் மீது அவருக்கிருந்த ஆர்வம் அவர் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பத்தையே உண்டாக்கிவிட்டது. சேலத்தில் கிடைக்கும் ஒப்பற்ற கனிப் பொருள்களைக் கொண்டு பெரிய தொழிற்சாலை அமைத்து, உலகத்திலேயே சிறந்த இரும்பைத் தயாரித்துவிட வேண்டுமென்பதைத் தம் வாழ்வின் இலட்சியமாகக் கருதினுர். தன் வாழ்வின் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு முதல் படியாகத் தம் கிடைத்தற்கரிய உத்தியோகத்தைஇராஜினுமா செய்தார். இங்கிலாந்திற்குச் சென்று 5 வருடகாலம் ஊதுலை மூலம் இரும்

யைக் கனிப் பொருள்களினின்றும் பிரித்தெடுக்கும் முறையை அறிந்து வந்து, கிழக்கிந்தியக் கம்பெனியின் உரிமைபெற்று "போர்ட் நோவா இரும்பு எஃகு ஆலை" என்ற பெயரில் திருவண்ணாமலையை அடுத்த போர்ட் நோவா அல்லது பரங்கிப்பேட்டையில் ஒரு தொழிற்கூடம் சமைத்தார். அங்கு உயர்தர "பன்றி இரும்பை"த் தயாரித்து இந்தியா போன்ற சீதோஷ்ண நிலையிலுள்ள நாடுகளில் அவ்வகை இரும்பைத் தயாரிக்கமுடியாதென்ற மேலைநாட்டினர் கூற்றைப் பொய்யாக்கினார். இச்சாதனைக்குப் பிறகு மேலை நாட்டினரில் பலர் நேரில் வந்து அம்முறையின் விவரத்தை திரு. ஹீத்திடமிருந்து அறிந்து சென்றனர். தொழிற்கூடம் வெற்றிப் பாதையில் நடை இட்டுச் சென்றது. தொழிற்கூடம் சிறிது சிறிதாக விரிவாக்கப்பட்டது. அதன் காரணமாகப் பணம் போதாத நிலை ஏற்பட்டு, சென்னை அரசினரின் உதவியை இருமுறை திரு. ஹீத் நாடினார். அவரின் ஆர்வம் நேர்மை, அவர் அமைத்த தொழிற்கூடத்தின் சிறப்பு ஆகியவற்றை அறிந்திருந்த அரசினர், தன் உதவிக்கரங்களை நீட்டத் தயங்கவில்லை. இருமுறை கமிட்டிகள் அமைத்து, முதன்முறை 6·75 ஆயிரமும், ரூ. 3 1/2 இலட்சமும் அளிக்கப்பட்டு மேலும் சிறு விசேஷ சலுகைகள் அவருக்கு அளிக்கப்பட்டன. இவ்வுதவியால் மனமுவந்த திரு. ஹீத் தன் தொழிற்கூடத்தை மேலும் விருத்தியடையச் செய்ய முயன்று, வெற்றியும் அடைந்தார். பருத்தியையும், தேயிலையையும் இந்தியாவுக்கு ஏற்றிவந்த கப்பல்கள், காலியாகத் திரும்பிச் செல்லும்போது, திரு. ஹீத் அவர்களின் தொழிற்கூடங்களில் தயாரான இரும்பைமலிவான கூலிக்கு மேலை நாடுகளுக்கு ஏற்றிச் சென்றதால் அவர் வாணிகம் கடல் கடந்த வாணிகமாய்ச் சிறந்து விளங்கியது.

ஒவ்வொரு நாளும் ஓடியாடி உற்சாகத்துடன் தொழிற்கூட வேலைகளைக் கவனிக்கும் திரு. ஹீத், ஒரு நாள் சித்தப்பிரமை பிடித்தவர் போல் செயலற்றுத் தன் அறையை விட்டு வெளிவராமல் இருந்தது எல்லாரையும் வியப்பிலாழ்த்தியது. அவருடைய மனத்தளர்ச்சிக்கும், சோர்வுக்கும் காரணமாக அமைந்தது கிழக்கிந்தியக் கம்பெனியிலிருந்து அவருக்கு வந்திருந்த ஒரு கடிதமே. கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து இரும்பு, எஃகு ஆலை அமைப்பதற்குப் பெற்ற உரிமைக்காகப் போர்ட் நோவா கம்பெனி தங்களுக்குச் சுமார் எட்டேகால் இலட்சம் ரூபாயை உடனடியாகச் செலுத்த வேண்டும் என்ற தகவல் அடங்கிய கடிதமே அது. பெரியதொரு பொருளாதார நெருக்கடியிலிருந்து அப்போதுதான் ஓரளவுக்குச் சமாளித்திருந்த கம்பெனிக்கு, இத்தகைய பேரிடி வரும் என்று எதிர்பார்க்கவில்லை, திரு. ஹீத்திற்குக் கம்பெனியார் கொடுத்திருந்த உரிமையை அவர் தென்னையின்மீது அடித்த தென்றலாக நினைத்திருந்தார். அது புயலாக மாறித் தென்னையையே சாய்த்துவிடும் என்று அவர் எள்ளளவும் எண்ணவில்லை. ஆம்! அவர் புயலால் தாக்கப்பட்ட தென்னையாகி விட்டார்.

தம்மால் இவ்வளவு தொகையைச் செலுத்த முடியாமல் ஈன்ற செல்வத்தை இழந்த மனவேதனையுடன் தொழிற் கூடத்தின் நிர்வாகத்தை மற்றொருவருக்கு மாற்றிவிட்டார்.

இவ்வாறு பலமுறை கம்பெனியின் நிர்வாகம் கைமாற்றப்பட்டு, இறுதியில் சீர்குலைந்து அழிந்த கதை ஒவ்வொருவரையும் உலுக்கிவிடும்.

சேலத்தில் இரும்பு ஆலை அமைக்க, திரு. ஹீத் அவர்களும், அவர்களுக்குப் பின்னர் பியூமான்ட் போன்றவர்களும் செய்த தியாகத்தோடு நிற்காமல் அவர்கள் ஏற்றிய விளக்கு எரிந்துகொண்டேயிருந்தது. அந்தத் தியாக ஒளியில் தெரிந்த பாதையில் மற்றும் சிலர் பயணத்தைத் தொடங்கினர்.

சேலத்து அருகில் இரும்புக் கனிப் பொருள்களை உருக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்கும் வரை இது ஏட்டுச் சிறப்போடு நிற்கவேண்டியதுதான் என்ற உண்மையை மேற்சொன்ன முயற்சிகள் தெளிவுபடுத்தின. சேலத்தின் இரும்பு மறந்துவிட்ட பழங்கதையாகிவிட்டது. இந்த நேரத்தில் தான் சேலத்துக்கு அருகில் நெய்வேலியில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது. அது அக் கனிப் பொருள்களின்மீது புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியது.

சேலத்தில் எப்படியும் இரும்பு ஆலை அமைக்க வேண்டுமென்பதில் என்றுமே குன்றா ஆர்வமுடைய அரசினர் சிறிதும் தாமதியாமல் நெய்வேலி நிலக்கரியின் மீது ஆராய்ச்சியைத் துவக்கினர். 1947 இல் திரு. எச். கே. கோஷ் என்ற நிலக்கரி ஆராய்ச்சி நிபுணர் வரவழைக்கப்பட்டார். 'சேலத்துக் கனிப்பொருள்களை உருக்குவதற்கு நெய்வேலி நிலக்கரி போதுமா?' என்று யோசனை கூறத் திரு. ஆர். என். டட் என்பவர் ஆய்வாளராக நியமிக்கப்பட்டார்.

சேலத்தில் இரும்பு ஆலை அமைக்கவேண்டுமென்ற மக்களின் ஆர்வத்தைப்போலவே அரசினரும் ஆர்வம் கொண்டிருந்தனர். சட்டசபையில் மட்டுமல்லாமல் தேசீய அபிவிருத்திக்கவுன்சிலில் 20-3-1960இல் நம் மாநிலத்தின் தேவையைப்பற்றி விவாதத் திறமையுடன் விளக்கிக் கூறியிருக்கிறார், முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம்.

பலரும் எடுத்த மாபெரும் முயற்சிகளால், சேலம், நெய்வேலி கனிப் பொருட்களின்மீது நார்வே, கிழக்கு, மேற்கு ஜெர்மனி, அமெரிக்க நாடுகளில் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இவர்களின் அயராத உழைப்பின் காரணமாக, வெளிநாட்டுக் கம்பெனிகளிலிருந்து வந்த பரிசோதனைகளின் முடிவுகளைப் பரிசீலனை செய்ய மத்திய சர்க்காரால், பல கமிட்டிகள் அமைக்கப்பட்டன. இக்கமிட்டிகளின் பரிந்துரைப்படி 1963ஆம் ஆண்டு கல்கத்தாவிலுள்ள 'எம். என். தஸ்தூர்" நிறுவனத்தாரை ஆலோசகராக நியமித்து விரிவான

அடுத்த கிழமை

அமைப்புச் செயலாளர் என். வி நடராசன் அவர்களது

மலேசியா சுற்றுப் பயணம் பற்றிய

"அண்ணாவின் அடிச்சுவட்டில்"

என்ற சிறப்புக் கட்டுரை இடம் பெறும்.

—ஆசிரியர்

மங்கையர் கும்மி!

— தமிழ்மதி —

கும்மியடி பெண்ணே கும்மியடி—நம்
கொள்கை விளங்கவே கும்மியடி
செம்மைகண் டோம்நம தாட்சியிலே—என்று
சிந்தை மகிழ்ந்திடக் கும்மியடி.

சர்வாதி காரியாய் ஆண்டுவந்தார்—மக்கள்
சக்திஎண் ணுதிறு மாந்துநின்றுர்.
கர்வம் பிடித்தக் கொடுங்கோலர் ஆட்சியும்
கல்லறை கொண்டதென் றுடுங்கடி.

ஏழை எளியவர் பாட்டாளி சிந்திய
இரத்தக் கண்ணீர்வெறும் நீராமோ?
வாழத் துடித்திட்டோர் கண்ணீராம் சூரிய
வாளொக்கு மென்றதும் பொய்யாமோ?

ஆட்சியில் கோணலால் ஆண்டவர் எங்கிலே
ஆனுர்? சரித்திரம் காட்டுதடி
மாட்சியுடன் மக்கள் தேர்ந்தெடுத் தாரதை
மீறிய தால்பட்டுப் போனுரடி.

பாடுபட்டு நைந்த பஞ்சைகள் வாழ்க்கையில்
பட்டபலன் பசிப் பட்டினிதான்.
ஏடுகள் போற்றிடும் அண்ணுவின் ஆட்சியில்
ஏற்றம் கொண்டாரின்று நாட்டினில்தான்!

கள்ளம் தெரியாத பேரறிஞர்—அண்ணன்
கையினிலே மக்கள் ஆட்சியடி
உள்ளங்கள் பூரித்துப் போனதடி—மக்கள்
உய்யும்நிலே வந்து சேர்ந்ததடி

தன்னலம் இல்லா மனத்தாண்டி—அண்ணன்
தாரணி போற்றும் குணத்தாண்டி
பன்னருந் தொண்டுகள் செய்துவரும்—அண்ணன்
பண்பினைப் போற்றி யடியுங்கடி

நன்மைகள் செய்யவே வந்தாண்டி—வளம்
நாட்ட நலம்செய்து நின்றுண்டி
உண்மையாய் நாட்டுக்குத் தொண்டுசெய்யும்—அவன்
உள்ளத்தை வாழ்த்தியே பாடுங்கடி!

அறிக்கை சமர்ப்பிக்கும்படி வேண்டிக்கொண்டனர்.

கஞ்சமலைப் பகுதியில் நார்வே நாட்டினர் சிபாரிசு செய்த 'எல்கம்' முறையைக் கையாண்டு, சேலத்து இரும்புக் கனியையும், நெய்வேலி நிலக்கரியையும், சேர்வராயனின் பாக்சைட்டையும், சங்கரிதுர்கத்தின் சுண்ணும்புக் கல்லையும், தும்கூரின் மாங்கனீசையும் மேட்டூரின் தண்ணீரையும், நெய்வேலி, குந்தா, மேட்டூர் ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யும் மின்சார சக்தியையும் பயன்படுத்தி ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் டன்கள் எஃகு தயாரிக்கக்கூடிய வெகு இலாபகரமான தொழிற்கூடத்தை அமைக்கலாம் என்று தஸ்தூர் கம்பெனியார் பரிந்துரை செய்தனர். இதற்குச் சுமார் 5 ஆயிரம் ஆட்களும், சுமார் ரூ. 95 கோடி மூலதனமும் தேவை என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

கனிப்பொருள் வெட்டி யெடுக்கும் கஞ்சமலைப் பகுதியிலேயே உருக்கு ஆலை அமைவதாலும், ஆலைக்கு வேண்டிய மூலப் பொருள்கள் ஆலைக்கு அருகிலேயே கிடைப்பதாலும், மூலதனத்தில் 40 சதவிகிதமே அந்நிய செலாவணி தேவைப்படுவதாலும், இந்தியாவிலுள்ள மற்ற எஃகு ஆலைகளைவிடச் சேலத்து இரும்பாலை இலாபகரமானதாகவே அமையுமெனவும் தஸ்தூர்கம்பெனியாரின் அறிக்கை கூறுகிறது.

மத்திய அரசு மட்டும் ஒப்புக்கொண்டுவிட்டால், சேலம் அளிக்கப்போகும் கனிவளம் வானம் அளித்த மழையாகப் பொழிய, தொழில்கள் பயிராகச்செழித்து வளரும் நாள் அண்மையில் உள்ளது. ஞாலத்தின் கரம் அலைவீசி மண்ணுக்குக் கீழேயுள்ள கரும் பொன்னைக் கரையில் ஒதுக்கும் நாள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிகிறது. கலைமகள் புவியியலின்மீது சிந்தும் புன்னகை, தொழிற்கூடங்களாக உருப்பெறும்போது, அங்கெல்லாம் களிநடம்புரியத் திருமகள் காத்திருப்பாள். சேலத்து இரும்பும் நெய்வேலி நிலக்கரியும் கைகோத்துத் தொழில்வளம் சமைக்கப் புறப்பட்டு விடும்!

—நன்றி: 'நித்திலக் குவியல்'

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவளைப்பற்றிய நினைவும்தொற்றிக் கொண்டது.

மலர்களையும் 'அவளை'யும் ஒரு சேர நிறுத்திப் பார்த்தான்! புதியதொரு ஏக்கம் பற்றிக்கொண்டது.

'அதோ! அந்த மலர்களைப் பார்க்கிறேன்! அவளது கண்களைப் போலவே இருக்கின்றனவே! அடடா! மலர்களைப் போன்ற கண்களா? கண்களைப்போன்ற மலர்களா?'

ஒருவித தடுமாற்றம்! தெளிவற்ற மயக்கம்! 'உண்மைதான்! மலர்களைப் போன்ற கண்கள்தான் அவளுக்கு! சே! இந்த மலர்களை நானும் பார்க்கிறேன்! எனக்குப் பிறகு இங்கே நீராட வருவோரும் பார்ப்பார்கள்!

வருவோரும் போவோருமாகப் பலர் காணும் பூக்கள் இவை! என் 'அவளது' கண்கள் அப்படியா? பலரது பார்வைக்கும் மயக்கம் ஊட்டுகிற கண்களைக் கொண்டவளா அவள்?

மலரே! உன்னைப் பார்க்கிறபோதிலே எனக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது, என் 'அவளது' கண்கள் உன்னைப்போல இருக்கிறதே என்று! மலரே! மலரே!...

தடுமாற்றம் மிகுந்தது. அதிக நேரம் நீராடிக்கொண்டிருந்த காரணம்; அவனது வெம்மைக் குறைந்தது; கொஞ்சம் தெளிவும் பிறந்தது.

புன்னகைக் கீரல் முகத்தில் படிய ஈரம் துடைத்துக் கொண்டிருந்தான். முன்னுள் இரவு தான் படித்துக் கொண்டிருந்த திருக்குறள் — இன்பத்துப் பால் நினைவுக்கு வந்தது! மெல்ல முணு முணுத்தான்!

''மலர் காணின் மையாத்தி
நெஞ்சே! இவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று''

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

5, ஜெனரல் சாமிநாய்க்கன் தெரு, திருவல்லிக்கேணி, :: சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும், டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும் பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும் நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.

சென்னையில் நமது வைத்தியசாலையை 23-8-67 முதல் 307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடுக்கு மாற்றப்படும் என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்கிறோம்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.